# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 08.07.2026**

**அசல் வழக்கு எண்.75/2014**

**பி.வா.சா.1 (கஸ்தூரி ஜெயராணி) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்குவிசாரணைதொடர்ச்சி**

எனதுதாயார் எனக்கு பிறப்பித்துக்கொடுத்த 18.08.1988 தேதியிட்ட நன்கொடை ஆவணத்தில் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் கிணறு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்திற்கு தெற்கு பக்கத்தில் எனது தாயாரின் கையிருப்பு இடம், சுவாமிதாஸின் இடம் மற்றும் கிணறு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்குறிப்பிட்ட கிணறு தற்போது இல்லை என்றால் சரிதான். அந்த கிணறு எப்போது மூடப்பட்டது என்றால் எந்த வருடம் அந்த கிணறு மூடியது என்று எனக்கு தெரியாது.

2. நான் எனது மகளுக்கு பிறப்பித்துககொடுத்த 10.10.2019 ம் தேதியிட்ட நன்கொடை ஆவணத்தில் அதில் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்திற்கு வடக்கு பக்கத்தில் அன்னத்தாய் புஞ்சை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2000 க்கு முன்பிலிருந்தே மேற்படி வடக்குமாலில் புஞ்சை இருந்தது கிடையாது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 5 வருடங்கள் கழித்துதான் மேற்குறிப்பிட்ட நன்கொடை ஆவணத்தை நான் எனது மகளுக்கு பிறப்பித்துக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்கண்ட நன்கொடை ஆவணத்தை பற்றி எனது எதிர்வழக்குரையிலோ, நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றிலோ தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. மேற்கண்ட ஆவணத்தை எனது தரப்பு சான்றாவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. 10.10.2019 தேதியிட்ட நன்கொடை ஆவணம் பிறப்பிகக்கப்பட்டபிறகு அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கான பட்டாவை எனது மகள் பெயருக்கு உட்பிரிவு செய்து மாற்றவேண்டும் என கோரி வருவாய்த்துறை அலுவலகத்தில் மனு செய்துள்ளேனா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 ஆவணம் நான் மேல்வகுறிப்பிட்ட மனு அளித்ததன்பேரில் விசாரணைக்கு வரக்கோரி வாதிக்கு

வன்னிக்கோனேந்தல் குருவட்டஅளவர் வழங்கிய அறிவிப்பு என்றால் சரிதான். மேற்கண்ட மனு சம்பந்தமாகவும், இவ்வழக்கு நிலுவையில் உள்ளது சம்பந்தமாகவும் தாலுகா அலுவலகத்திற்கு எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. வழக்குரையில் வாதி குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. (சாட்சி தாமாக முன்வந்து வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் எனக்கு தெரியும் என்று கூறினார்).

4. எனக்கு எனது தாயார் பிறப்பித்துக்கொடுத்த 18.02.1988 தேதியிட்ட நன்கொடை ஆவணத்தில் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தின் வடக்கு மாலாக வடகீழ் மூலையில் அன்னத்தாயம்மாளுக்கு அவர் கிரையம் கொடுத்திருந்த சென்ட் 5 க்கும், பாஞ்சாலி என்ற திரௌபதி நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் எனதுதாயாருக்கு பாத்யிதப்பட்ட 62 சென்ட் இடத்தில் வடகீழ் மூலையில் 5 சென்ட் இடம் அன்னத்தாய்க்கு கொடுக்கப்பட்டதாக துலங்கும் என்றால் சரிதான். மேற்கண்ட விபரத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். அன்னத்தாய்க்கு பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட மேற்கண்ட 5 சென்ட் இடத்தில் எங்களுக்கு தற்போது எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். மேற்கண்ட 5 சென்ட் இடத்தில் வாதியின் அனுபவத்தை நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என கோரி வாதி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அந்த 5 சென்ட் இடத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும் சரிதான்.

5. மேற்கண்ட 5 சென்ட் இடத்திற்கு சேர்ந்தரணையாக வடக்குபக்கத்தில் உள்ள 2.83 சென்டிற்கும் சேர்த்து மொத்தம் 7.83 சென்ட் நிலத்திற்கு அன்னத்தாய் பெயரில் புல எண்.37/6 உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டா தவறுதலாக ஏற்பட்டது. அந்த பட்டா ரத்துசெய்யப்பட்டுவிட்டது. மேற்கண்ட பட்டா எப்போது ரத்து செய்யப்பட்டது என்றால் 2018 ல் கோட்டாட்சி தலைவரால் ரத்து செய்யப்பட்டது. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 3 வருடங்கள் கழித்து மேற்கண்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி கோட்டாட்சி தலைவரிடம் நாங்கள் மனு செய்தோம் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே நாங்கள் மனு கொடுத்துவிட்டோம். நான் தாக்கல் செய்துள்ள மேற்படி உத்தரவான பி.வா.சா.ஆ.7 ஆவணம் வழகது நிலுவையில் இருக்கும்போது பெறப்பட்டதால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல

என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 உத்தரவிற்கு எதிராக மாவட்ட வருவாய்த்துறை அலுவலரிடம் வாதி மேல்முறையீடு செய்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகலை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் பிறப்பித்த உத்தரவில் இவ்வழக்கு நிலுவையில் இருப்பதை காண்பித்து வருவாய்த்துறை கோட்டாட்சியர் வழங்கிய உத்தரவை ரத்து செய்யஇயலாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

6. இவ்வழக்கில் நான் கோரியதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு எதிராக ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 புகைப்படங்களில் உள்ள இடம்தான் வழக்கு தாவா சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள 2 வது புகைப்படத்தில் வெள்ளைநிறப்பட்டுள்ள வீடுதான் விஜயராணியின் வீடு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஓட்டுசாய்வு, தொழுவம் ஆகியவற்றில் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த ஓட்டுசாய்வு மற்றும் தொழுவம் தற்போது இல்லை. அது எங்கள் இடம். நாங்கள் எதிர்கோரிக்கையில் தெரிவித்துள்ளவாறு குடிசை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு ஆணையர் அறிக்கையிலும் நான் மேற்கூறியவாறு குடிசை எதுவும் இருப்பதாக தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஓட்டுசாய்வு குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 6 புகைப்படத்தில் உள்ள ஓட்டுசாய்வுக்கு பின்புறம் தொழுவம் போன்ற அமைப்பு இருந்தது என்றால் முன்பு இருந்தது. தற்போது இல்லை.

7. எனது மகளுக்கு 10.10.2019 தேதியிட்ட ஆவணத்தை பிறப்பித்துக் கொடுத்தபிறகு நாங்கள் வீடு கட்ட ஆரம்பித்தோம் என்றால் சரிதான். மேற்படி வீடு கட்ட ஆரம்பிப்பதற்கு முன்பு இவ்வழக்கில் முதலாவது ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதலாவது ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த முதலாவது அறிக்கையில் பிராது தபசில் சொத்தில் கருங்கல் மற்றும் செங்கல்,

குழைமண்ணால் கட்டப்பட்டு பாதி ஆஸ்பெஸ்டாஸ், பாதி ஓடு வைத்துக் கட்டப்பட்ட கட்டிட அமைப்பு இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுளளது என்றால் சரிதான். அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான் மீண்டும் ஆணையர் நியமனம் செய்யகோரி மனு தாக்கல் செய்தோம். என்னிடம் காட்டப்படும் முதலாவது ஆணையர் அறிக்கை 2020ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் மீண்டும் ஆணையர் நியமனம் கோரியதற்கான காரணம் என்னவென்றால் முதலாவதாக நியமிக்கப்பட்ட ஆணையர் பிராது தபசில் சொத்துக்களை சரியாக அளவீடு செய்யாததால் மீண்டும் ஆணையர் நியமனம் கோரினேன்.

8. எனது மகளுக்கு நான் 2023ம் ஆண்ஷடுக்கு பின்பு வீடு கட்டிய சமயத்தில் பிராது தபசில் சொத்துக்களில் இருந்த ஓட்டுசாய்வு மற்றும் தொழுவத்தை இடித்து தெற்குபக்கத்தில் இருந்த கிணற்றை மூடினேன் என்று தெரிவித்து எனக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் அளிக்கப்பட்டதன்பேரில் விசாரணைக்கு நான், எனது மகள் மற்றும் மருமகன் ஆஜரானோம் என்றால் சரிதான். அந்த விசாரணையின்போது ஓட்டுசாய்வு, தொழுவம் ஆகியவை மழை பெய்ததில் இடிந்து விழுந்ததாக கூறினேனா என்றால் இல்லை. எங்களது இடத்திலிருந்து ஓட்டுசாய்வு மற்றும் தொழுவத்தை நாங்கள் அப்புறப்படுத்தினோம். மேற்கண்ட புகார் பொய்புகார் விசாரணை செய்யப்பட்டபிறகு போலீசாரால் முடிக்கப்பட்டது.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**